**தலைப்பு 255 - கொழும்பு மாவட்டச் செயலகம்**

----------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கொழும்பு மாவட்டச் செயலகத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கொழும்பு மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியன்று கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, மாவட்டச் செயலகத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவான ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கும் இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான நிதிக்கூற்றுக்களை மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து அதனைப் பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டுவதுடன், அதன் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வுகளை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்யவும் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவது என்பன எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்கள் அற்றதென வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுகளைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிரயாத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் வசதியானவாறும் நியாயமானவாறும் உள்ளடங்கிள்ளன என்பதும்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டபூர்வத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தேவை இன்மையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிலானவற்றுக்கு ஒப்பாக இருப்பதாக அறிவிக்க முடியாமை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தேவை செயலகத்திற்குக் கிடையாதாகையால் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் முற்பணக் கணக்குகளில் (ஏசீஏ-5), கொழும்பு மாவட்டச் செயலகப் புத்தகங்களின் பிரகாரமான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 183,617,153 ஆகவும் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 184,860,882 ஆகவும் காணப்பட்டமையால் இணக்கமுறாத ரூபா 1,243,729 மீதி காணப்பட்டது. அதில் 93 சதவீதமான ரூபா 1,150,694 தொகையானது 2013 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்பிருந்தே கணக்கிணக்கம் செய்யப்படாதிருந்தமையால் அது முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் மீதியாக அவதானிக்கப்பட்டது. | திறைசேரிப்பு புத்தகங்களுக்கும் திணைக்களம் புத்தகங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளுக்குரிய கணக்கிணக்கம் செய்யப்படாத மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குழுவொன்றின் மூலம் தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணம் என்பன**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நடைமுறை அல்லாத சொத்துக்களது அசைவு அறிக்கையில் 2018 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதிகளாக முறையே காணி மற்றும் கட்டிடங்களது பெறுமதி ரூபா 55,690,000 மற்றும் நிர்மாண வேலைகளது பெறுமதி ரூபா 38,748,157 என்பவற்றால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களில் காணி, கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகளது ஆரம்ப மீதிகள் பிழையின்றி காட்டப்பட வேண்டும். | 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறை அல்லாத சொத்துக்களது அசைவு அறிக்கையின் மீதிகள் திறைசேரி அச்சிடல் பிரதிகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும், உள்ளவாறான மீதிகள் (முன்னைய ஆண்டுகளின் கொள்வனவுகள்) CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கியமையால் ஆரம்ப மீதிகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. |
| (ii) நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்களது அசைவு அறிக்கையில் வாகனங்களது பெறுமதியினது ஆரம்ப மீதி ரூபா 12,604,786 குறைவாகவும், இயந்திர சாதனங்கள், வீட்டுத் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் என்பவற்றினது பெறுமதி ரூபா 111,482,443 குறைவாகவும் குறித்துக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் வாகனங்கள், இயந்திர சாதனங்கள், வீட்டுத் தளபாடம், அலுவலக உபகரணங்களது ஆரம்ப மீதி சரிவரக் காட்டப்பட வேண்டும். | CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்ப மீதியை உள்ளடக்குதல், சொத்துக்களை வகைப்படுத்துதல், மாற்றுப் பத்திரங்களின் மூலம் நிலையான சொத்துக்களின் உள்ளவாறான பெறுமதியை உள்ளடக்குதல் ஆகிய காரணங்களால் பெறுமதி குறைவடைந்துள்ளது. |

**(இ) பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை**

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 214 க்கமைய வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு பேணப்படவில்லை. | நாளாந்தப் பொறுப்புகளைப் பரிசிலீக்கக் கூடியவாறு பொறுப்புகளை பொறுப்புப் | இப் பதிவேடு எதிர்காலத்தில் தயாரிக்கப்பட்டுப் |

| | | | |
|---|---|---|---|
| | | பதிவேட்டில் குறித்துக் கொள்ளுதல் வேண்டும். | பேணப்படும். |
| (ii) | வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு<br>------------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 1647(உ) க்கமைய வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு பேணப்படவில்லை. | வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு பேணப்பட வேண்டும். | இப் பதிவேடு எதிர்காலத்தில் தயாரிக்கப்பட்டுப் பேணப்படும். |
| (iii) | மின்சார உபகரணப் பதிவேடு<br>------------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) க்கமைய மின்சார உபகரண பதிவேடு பேணப்படவில்லை. | அரசாங்க கட்டிடங்களது சகல மின்சார துணைப்பாகங்களும் உபகரணங்களும் தொடர்பாக பதிவேடு பேணப்பட வேண்டும். | இப் பதிவேடு எதிர்காலத்தில் தயாரிக்கப்பட்டுப் பேணப்படும். |
| (iv) | ஆளுக்குரிய வேதனப் பதிவேடு<br>------------------------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 453 க்கமைய ஆளுக்குரிய வேதனப் பதிவேடு பேணப்பட்டபோதும், அது நாளதுவரையாக்கப் படவில்லை. | திறைசேரி மற்றும் கணக்காய்வு மாதிரிப் படிவத்தின் பிரகாரம் ஆளுக்குரிய வேதனப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | இப்பதிவேடு எதிர்காலத்தில் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படும் |
| (v) | பிணைப் பதிவேடு<br>------------------------------ | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) க்கமைய பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களதும் ஊழியர்களதும் தகவல்களை உள்ளடக்கிய பதிவேட்டைத் தயாரித்துள்ளபோதும், அது நாளதுவரையாக்கப் படவில்லை. | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள தொடர்பாக பிணைப் பதிவேட்டை நாளதுவரையாக்கிப் பேண வேண்டும். | இப்பதிவேடு எதிர்காலத்தில் நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படும். |
| (vi) | கணக்காய்வு ஐய வினாப் பதிவேடு<br>------------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 452(1) க்கமைய கணக்காய்வு ஐய வினாப் பதிவேடு உள்ளபோதும், அது நாளதுவைரயாக்கப்பட்டுப் பேணப்படவில்லை. | கணக்காய்வு ஐய வினாப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்பட வேண்டும். | இப்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் எதிர்காலத்தில் பேணப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | எரிபொருள் பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 1647(ஈ) க்கமைய எரிபொருள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை. | எரிபொருள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்பட வேண்டும். | இப்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் எதிர்காலத்தில் பேணப்படும். |
| (viii) | கணனித் துணைப் பாகங்களுக்கும் மென் அணிகளுக்குமான நிலையான சொத்துப் பதிவேடு | | |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், துணைப்பாகங்கள், மென் அணிகள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டுள்ள போதும், அது நாளதுவரையாக்கப் படவில்லை. | கணனிகள், துணைப்பாகங்கள் மென் அணிகள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்பட வேண்டும். | இப்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் எதிர்காலத்தில் பேணப்படும். |
| (ix) | வாகன சம்பவப் பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 1645(அ) க்கமைய வாகன சம்பவப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படவில்லை. | சகல வாகனங்களுக்கும் வாகன சம்பவப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்பட வேண்டும். | இப்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் எதிர்காலத்தில் பேணப்படும். |

**(ஈ) கணக்கீட்டு உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்கள்**

2018 ஆம் ஆணடின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டுமாயினும் அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகத்தின் நிதிசார் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து அதனைப் பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டுவதுடன், அம் முறைமையின் திறன் தொடர்பாக அவ்வவ்போது | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள | கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வு மேற்கொள்ளப் பட்டமையைத் தெரிவிக்கும் கூற்று கணக்காய்வாளர் |

| | | |
|---|---|---|
| மீளாய்வுகளை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். அம் மீளாய்வானது எழுத்து மூலமாக இருப்பதுடன் அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமாயினும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதைத் தெரிவிக்கும் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வேண்டும். | தலைமை அதிபதிக்கு எதிர்காலத்தில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(உ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் viii ஆம் அத்தியாயத்தினது 10 ஆம் பிரிவு | 340,420 | கொழும்பு மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் பணிபுரியும் நிறைவேற்று தரத்தில் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 2018 நவம்பர், டிசெம்பர் மாதங்களில் 1/20 படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை | நிறைவேற்று தரத்தில் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 1/20 படி வழங்கப்படலாகாது | உள்நாட்டு அலுவல்கள் செயலாளரின் HA/F/01/AC/CTS/001இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப் பிரமாணங்கள் 565(2)(3)(4) | 7,707,674 | வைப்புக் கணக்கு முறையாகப் பேணப்படாமை | வைப்புக் கணக்கு முறைப்படி நாளதுவரையாக்கப் பட்டுப் பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த வைப்புக் கணக்கு முறையாகப் பேணப்படும். |
| 565(5) | - | மாதாந்த பொழிப்புக் கூற்று அடுத்துவரும் மாதத்தின் இறுதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமை. | மாதாந்த வைப்புப் பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அம்மாதாந்த பொழிப்புக் கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் படுவதற்கான நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்படும். |
| 570(அ) | 10,098,791 | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் 10 ஆண்டுகளைக் கடந்த 21 காணி வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை. | காலங்கடந்த காணி வைப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வழக்கொன்று தொடர்பான இக்காணி வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளததாக அறிவிக்கப்பட்ட போதும், அப்பதிலுக்குரிய ஒவ்வொரு வைப்பு சம்பந்தமாகவும் தெளிவான விபரம் சமர்ப்பிக்கப் படவில்லை. |
| 2016 டிசெம்பர் 09 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | மீளாய்வாண்டின்போது கொழும்பு மாவட்டச் செயலகத்தில் 9 வாகனங்கள், கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் 2 வாகனங்கள், கடுவெல பிரதேச செயலகத்தில் 2 வாகனங்கள், இரத்மலானை பிரதேச செயலகத்தில் 2 வாகனங்கள் என்பவற்றின் எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த பரிசோதனைகள் முறையாக மேற்கொள்ளப்படும் |

**(ஊ) மோசடித் தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல்கள்**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| • மஹரகம பிரதேச செயலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரசேதத்தில் 2014 டிசெம்பர் 09 ஆந் திகதி மரணமடைந்த உதவி பெறும் வயது முதிர்ந்தோருக்கான படிக்குரிய அட்டையைப் பயன்படுத்தி 2018 மே மாதம் வரை 40 மாதங்களுக்கு ரூபா 77,200 மோசடியாகப் பெறப்பட்டிருந்தது. அது தொடர்பான முறையான பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை. | குறித்த பரிசீலனையை மேற்கொண்டு இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| • மஹரகம பிரதேச செயலகத்தின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் 525A உடஹமுல்ல கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வயது முதிர்ந்த 5 பேரின் பொருட்டு அவர்கள் இறந்த பின்னரும் மோசடியாக ரூபா 330,200 பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பரிசீலிக்கப்படவில்லை. | குறித்த பரிசீலனையை மேற்கொண்டு இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 கட்டு நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின்போது மாவட்டச் செயலகத்தின் மாதாந்தக் கட்டு நிதியைத் திட்டமிடல், கோரிக்கை விடுத்தல், பெறப்பட்ட கட்டு நிதி என்பன தொடர்பான பகுப்பாய்வின்போது கோரிக்கை விடுத்த மொத்தக் கட்டு நிதியிலும் பார்க்க ஆண்டின் போது பெறப்பட்ட மொத்தக் கட்டு நிதி ரூபா 25 மில்லியன் குறைவாகவே வழங்கப்பட்டிருந்தது. | முறையாகக் கட்டு நிதி திட்டமிடப்பட்டு குறித்த கட்டு நிதியைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**2.2 செலவின மீளாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக 18 செலவின விடயங்களில் ரூபா 210,487,900 அதிகரித்தும் 18 செலவின விடயங்களில் ரூபா 210,487,900 குறைத்தும் இருந்தமையால் மதிப்பீட்டுத் தயாரிப்பானது பிழையற்றதாக அமையவில்லை. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கமைய இயன்றவரை பிழையற்ற மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாவட்டச் செயலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்டனவாதலால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) செலவின விடயம் 255-1-1--1002 மற்றும் 255-1-1-1201 என்பவற்றுக்குரிய கூட்டுத் தொகைச் சதவீதம் முறையே 103 சதவீதம், 99 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. மூல | நிதிப்பிரமாணம் 50 இல் காணப்படும் ஏற்பாடுகளுக்கமைய இயன்றவரை தவறின்றி மதிப்பீட்டைத் | விசேட காரணங்களுக்கென ஊழியர்களைப் பணியிலமர்த்தியமை, மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டை விட |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு மற்றும் நிகர நிதியேற்பாடு என்பவற்றுக்கிடையே பெருமளவு வேறுபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறைவாகவே திறைசேரியிடமிருந்து பெறப்பட்டமை, மேலதிக நிதி பெறப்படாது எதுவுமின்றி செலவின முகாமைத்துவ அடிப்படையில் நிதிறேப்பாடு மாற்றத்திற்கு உள்ளானது. |
| (இ) | 255-1-1-2401-7 இன் மொத்த நூற்றுக்கு நூறு சதவீதமாகிய மொத்த மதிப்பீடுமே நிதிப் பிரமாணங்கள் 66, 69 என்பவற்றின் பிரகாரம் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விடய இலக்கம் 255-1-1-1301 இல் கழித்துக் கொள்ளப்பட்ட தொகை 72 சதவீதமாக அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இல் காணப்படும் ஏற்பாடுகளுக்கமைய இயன்றவரை தவறின்றி மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஹோமாகம பிரதேச செயலக நிர்மாணப் பணிக்குப் பெறப்பட்ட பணம் மற்றும் வாகனப் பராமரிப்புச் செலவு ஏற்படாமை என்பவற்றால் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. |
| (ஈ) | செலவின விடயங்கள் 7 க்கான ரூபா 2,826,882 நிதியேற்பாட்டில் 6 முதல் 44 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது. | நிதிப்பிரமாணம் 50 இல் காணப்படும் ஏற்பாடுகளுக்கமைய இயன்றவரை தவறின்றி மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலவுக்கான தேவை ஏற்படவில்லை. |

## 2.3 பொறுப்புகளுக்கான கடப்பாடுகளுக்கு உட்படுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொறுப்புகளது பெறுமதியும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பொறுப்புகளது பெறுமதியும் கணக்கிணக்கம் செய்யப்பட்டபோது 3 செலவின விடயங்களில் பொறுப்புகளது அதிகரிப்பு ரூபா 100,031 ஆகவும் 3 செலவின விடயங்களில் பொறுப்புகளது குறைவு ரூபா 76,790 ஆகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | குறித்த பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் சரிவரக் காண்பிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது 2019 சனவரி 31 வரை நிலவிய பொறுப்புகள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஏற்பட்ட பொறுப்புகளுக்குரிய உறுதிச் சான்றுகளின் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. |

**2.4 ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயலகத்திற்கு 13 அமைச்சுக்களாலும் 04 திணைக்களங்காலும் வழங்கப்பட்ட நிதியில் முறையே 137,205,331 மற்றும் ரூபா 15,311,755 என்பன குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. அது 06 முதல் 64 சதவீதமானதாகும். | ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் வழங்கப்படும் நிதி முறைப்படி உபயோகப்படுத்தப்பட வேண்டும். | அரசாங்கத்தின் கொள்கைக்கமைய இச் செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டமையால் இந்நிலைமை ஏற்பட்டது. |

**2.5 முற்பண வழங்கலும் தீர்வும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் ஏற்பாடுகளுக்கமைய இடைக்காலக் கட்டு நிதியானது நிறைவேற்றுதர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே வழங்கப்படலாமெனினும், கொழும்பு மாவட்டச் செயலகம் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக நிறைவேற்று தரத்தில் அல்லாத 55 உத்தியோகத்தர்களுக்கு 148 சந்தர்ப்பங்களில் ரூபா 2,139,830 இடைக்காலக் கட்டு நிதியை வழங்கியிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த இடைக் காலக் கட்டு நிதியில் அது 73 சதவீதமாகவும் இருந்தது. | நிறைவேற்றுதர உத்தியோகத்தர் களுக்கு மாத்திரமே இடைக் காலக் கட்டு நிதி வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிறைவேற்றுதர உத்தியோகத்தர் களுக்கு மாத்திரமே இடைக்காலக் கட்டுநிதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 371(5) க்கமைய வழங்கப்பட்ட கட்டு நிதி பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும், கொழும்பு மாவட்டச் செயலகத்தில் 121 சந்தர்ப்பங்களில் ரூபா 2,211,365 இடைக் காலக் கட்டு நிதி வழங்கப்பட்டு 10 முதல் 212 நாட்களின் பின்னரே தீர்வு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே, 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த இடைக் காலக் கட்டு நிதியாகிய ரூபா | பெறப்பட்ட கட்டு நிதி பணி நிறைவேறியவுடன் தீர்வு செய்யப்பட வேண்டும். | குறித்த உத்தியோகத்தர்கள் 14 நாட்களுக்குள் அவற்றைத் தீர்வு செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 2,915,780 தொகையில் ரூபா 2,220,365, அதாவது, ஏறக்குறைய 76 சதவீதம் குறித்த நாட்களில் தீர்வு செய்யப்படவில்லை. | | |
| (இ) | கொழும்பு மாவட்டச் செயலகத்தில் இடைக் காலக் கட்டு நிதிப் பதிவேடு முறையாகப் பேணப்படாமை அவதானிக்கப்பட்டது. | இடைக் காலக் கட்டு நிதிப் பதிவேடு முறையாகப் பேணப்பட வேண்டும். | தேவையான தகவல்களை உள்ளடக்கிய கட்டு நிதிப் பதிவேட்டை முறையாகத் தயாரிக்குமாறு உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | இடைக் காலக் கட்டு நிதியைப் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் தாம் பெற்ற இடைக் கால கட்டு நிதியை குறித்த காலத்துக்குள் தீர்வு செய்யாதிருக்க, அதே உத்தியோகத்தருக்கு மீண்டும் ஒரு தடவை கட்டு நிதியை வழங்கியமை அவதானிக்கப்பட்டது. | பெறப்பட்ட கட்டு நிதி தீர்வு செய்யப்படாது மீண்டும் இடைக் காலக் கட்டு நிதி வழங்கப்படலாகாது. | இடைக் காலக் கட்டு நிதியைத் தீர்வு செய்ததன் பின்னர் மீண்டும் இடைக் காலக் கட்டு நிதியை வழங்கலாமென விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். |
| (உ) | கொழும்பு மாவட்டச் செயலகத்தின் விசேட நிர்மாண வேலைக்கான குளிரூட்டிகள், தீ, பீ.எம்.எஸ் என்பவற்றிற்கு 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்த முற்பணம் ரூபா 23,329,224 ஆகும். இம்முற்பணத்தை வழங்கும் போது பிணை முறி பெறப்பட்டிருந்தபோதும், அப்பிணை முறி 2018 யூலை 07 வரை ஓராண்டிற்கு மாத்திரம் செல்லுபடியாவதுடன் அப்பிணைமுறிக் கால எல்லைக்குள் முற்பணத்தை முற்றாகத் தீர்வு செய்தோ அல்லது பிணை முறியினது கால எல்லையை நீடித்தோ இருக்கவில்லை. | முற்பணத்தினது பிணை முறிக் கால வரம்பிற்குள் முற்பணத்தை அறவீடு செய்ய அல்லது பிணையினது கால எல்லையை நீடிக்க வேண்டும். | குளிரூட்டிகள், தீ, பீ.எம் முற்பணப் பிணை முறியை 2019/5/10 வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவித்தபோதும், அதற்குரிய முற்பணப் பிணை முறியினது பிழையற்ற சான்றுறுதிப்படுத்திய பிரதி ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2.6 வைப்பு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களது காணி இழப்பீட்டுக் கொடுப்பனவு வைப்புகளைத் தவிர, ஏனைய இரு வகையான வைப்புகளது 2 ஆண்டுகளைக் கடந்த வைப்புகளது பெறுமதி ரூபா 7,207,674 ஆகும். அது தொடர்பாக 571 ஆம் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 571 ஏற்பாடுகளுக்கமைய தீர்வு செய்யப்படாத வைப்புகளைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.7 வங்கிக் கணக்கைப் பேணுதல்

வங்கிக் கணக்கைப் பேணுதல் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது புலனாகிய குறைபாடுகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பு மாவட்டச் செயலகத்தின் இனங்காணாத வரவு மீதியாகிய ரூபா 1,392,796 இனங்காணப்பட்டுக் கணக்கிலிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செலவுகளை இனங்கண்டு குறித்த செலவினத் தலைப்புகளில் கணக்கிலிட வேண்டும். | தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. |
| (ஆ) கொழும்பு மாவட்டச் செயலகத்தின் கடுவெல பிரதேச செயலகத்தின் இனங்காணப்படாத செலவாக முறையே ரூபா 78,370 மற்றும் ரூபா 6,875 என்பன சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகளாகக் காட்டப்பட்டிருந்தன. | இனங்காணப்படாத செலவை தீர்வு செய்து சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.8 கடன் நிலுவை அறவிடப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு 2018 க்கமைய 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை | இக்கடன் மீதிகளை அறவிடுவதற்குத் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க | இக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு சட்டமா அதிபரிடம் வினவப்பட்டு குறித்த நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| மீதியில் 2019 மே 31 இல் உள்ளவாறு வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,853,393, சேவையிலிருந்து விலகிய 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 337,631 என ரூபா 2,191,029 கடன் நிலுவை அறவிடப்படாதிருந்தது. அக்கடன் மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் நிலுவைகள் ஆகும். | வேண்டும். | மேற்கொள்ளப் படுகின்றன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

கொழும்பு மாவட்டச் செயலகத்தினதும் 13 பிரதேச செயலகங்களினதும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரமான 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. பின்வரும் தேவைகள் திட்டத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவட்டச் செயலகம் சமர்ப்பித்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டினது நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையில் உள்ள பதவியணியினர் தொடர்பான விபரம், வருடாந்த செயற்பாடுகள் தொடர்பான கட்டு நிதித் தேவைகளுக்கான திட்டம், திட்டமிடப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டான வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்படவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட விபரம் உள்ளடக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத சகல விபரங்களையும் உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) பிரதேச செயலகங்கள் 9 க்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டில் உள்ளவாறு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு வியூகம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட விபரம் | எதிர்வரும் ஆண்டுகளில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத விபரம் யாவற்றையும் உள்ளடக்குவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | சேவையில் உள்ள பதவியணியினர் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்டிராததுடன், 3 பிரதேச செயலகங்களுக்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டில் உள்ளவாறு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையில் உள்ள பதவியணியினர் தொடர்பான விபரம் என்பன உள்ளடக்கப்படவில்லை. | உள்ளடக்கப்பட வேண்டும். | |
| (இ) | மொறட்டுவை பிரதேச செயலகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 2018 ஆம் ஆண்டில் செயற்படுவதற்கான எதிர்பார்த்த செயல்திட்டங்களது எண்ணிக்கை காட்டப்படவில்லை. செயற்திட்ட அமுலாக்கல் விதிமுறை மாத்திரமே காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரம் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்காத விபரம் யாவும் உள்ளடக்கப்படும். |
| (ஈ) | ஹோமாகம, தெஹிவளை, கெஸ்பேவ பிரதேச செயலகங்களின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய காலவரையறைக்குள் குறித்த செயற்பாடுகள் காலாண்டுக்கொரு முறை அல்லது மாதாந்தம் எந்தளவு பூர்த்த செய்யப்பட்டது என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட விபரம் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத விபரம் யாவற்றையும் உள்ளடக்குவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.2 கடமைகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் மஹரகம பிரதேச செயலகங்களில் முறையே ரூபா 300,000 மற்றும் ரூபா 200,000 என மதிப்பீடு செய்யப்பட்ட 2 செயற்திட்டங்கள் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்ப வேலைகள் (மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்ட/ கேள்விகள் தயாரிக்கப்பட்ட) மாத்திரமே பூர்த்தியாகிய நிலையில் இருந்ததுடன், அவற்றின் பௌதீக முன்னேற்றம் 0-5 சதவீதமாக இருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கென மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கவிக்கப் படவில்லை. |
| (ஆ) | கொழும்பு, பாதுக்கை, மஹரகம, இரத்மலானை ஆகிய பிரதேச செயலகங்களில் ரூபா 1,860,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்ட 8 செயற்திட்டங்களது பௌதீக முன்னேற்றம் 6 முதல் 25 சதவீதமாக இருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கென மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கவிக்கப் படவில்லை. |
| (இ) | ஹோமாகம, சீதாவாக்கை, மஹரகம, கெஸ்பேவ ஆகிய பிரதேச செயலகங்களில் சுகிதபுரவர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுலாகிய செயற்திட்டங்களில் ரூபா 7,556,952 ஆக மதிப்பீடு செய்யப்பட்ட 16 செயற்திட்டங்கள், 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிலையிலேயே இருந்ததுடன் அவற்றின் முன்னேற்றம் 6 சதவீதத்துக்கும் 25 சதவீதத்துக்கும் இடைப்பட்டதாக இருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கென மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கவிக்கப் படவில்லை. |
| (ஈ) | உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | 2018 ஆம் ஆண்டிற்கென | இது தொடர்பாகக் கருத்து |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டச் செயலகத்தில் ரூபா 3,840,158 ஆக மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டமொன்று 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அங்கீகரிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும். | தெரிவிக்கவிக்கப் படவில்லை. |

**3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஹோமாகம பிரதேச செயலகத்திற்குப் புதிய அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்துக்குரிய ஒப்பந்தகாரர் 2017 டிசெம்பர் 22 ஆந் திகதி அதனைப் பூர்த்தி செய்து ஒப்படைத்திருக்க வேண்டுமாயினும், 2017 டிசெம்பர் 12 ஆந் திகதியளவிலும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 30 சதவீதம் மாத்திரமாகவே இருந்தது. பின்னர் குறித்த ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தைக் கைவிட்டிருந்தார். கட்டிடத்தின் எஞ்சிய வேலையைப் பூர்த்தி செய்வதற்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 180 மில்லியன் நிதியேற்பாடும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 188 மில்லியன் நிதியேற்பாடும் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் அதற்கென திறந்த போட்டியுடனான கேள்விகள் கோரப்படுவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் 2019 யூன் 06 வரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இக்கட்டிடத்திற்கான நிர்மாண வேலைத்திட்டம் 2019 யூன் 06 வரை ஹோமாகம பிரதேச சபையால் அங்கீகரிக்கப்படாதிருந்தது. அவ்வாறாக அங்கீகரிக்கப்பட்டிராத கட்டிடத்திற்கான திட்டத்தின் பிரகாரம், அத்துமீறிய நிர்மா வேலை ஒன்றிற்கு ஹோமாகம பிரதேச செயலகம் விதித்த ரூபா 2,983,000 சேவைக் | 2019 ஆம் ஆண்டிற்கென ரூபா 188 மில்லியன் நிதியேற்பாடு வருடாந்த மதிப்பீட்டில் உள்ளமையால் குறித்த செயற்திட்டத்தைத் துரிதமாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது அமைச்சின் செயலாளரது அதிகாரத்தின் கீழ் வரும் பொருட் கொள்வனவு ஆதலால், அமைச்சிடம் வினவி அதற்கமைய மாவட்டப் பொறியியலாளர் வழங்கும் அறிக்கைக்கேற்ப எதிர்காலத்தில் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் செலுத்தப்பட்ட வேண்டுமென்பதும் மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மஹரகம பிரதேச செயலகம் நிறுவியுள்ள 6 மாடிக் கட்டிடத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் மஹரகம நகர சபையால் கட்டிடத்திற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டு 4 மின் தூக்கிகள் பொருத்தப்பட வேண்டுமாயினும், 2019 பெப்ரவரி 14 வரை கட்டிடத்தில் மின் தூக்கிகள் பொருத்தப்படவில்லை. | குறித்த மின் தூக்கிகளை துரிதமாகத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தேவையான நிதியேற்பாட்டுடன் மின் தூக்கிகளைப் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களது பிணை வைப்பு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 880 ஆம் இலக்க நிதிப் பிரமாணம் மற்றும் கொழும்பு மாவட்டச் செயலாளரின் 2008 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய AE/K/பிணை/2008 எனும் இலக்கச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கெஸ்பேவ, இரத்மலானை, பாதுக்கை, பிரதேச செயலகங்களின் 09 உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்ததற்கான சான்று இருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2008 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய சுற்றறிக்கை ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | குறித்த நடவடிக்கைகளை நிதிப்பிரமாணத்தின் படி மேற்கொள்வதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | மஹரகம மற்றும் கடுவெல ஆகிய பிரதேச செயலகங்களில் தற்போது சேவையில் இல்லாதிருக்கும் முறையே 8 மற்றும் 6 உத்தியோகத்தர்களது பாஸ் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைப்பதற்கு 2019 மே 14 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 892 ஆம் நிதிப் பிரமாணத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களது மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் | சேவையில் இல்லாத உத்தியோகத்தர்களது பாஸ்புத்தகங்கள் திருப்பி ஒப்படைக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 892 ஆம் நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த அறிக்கைகள் அமைச்சிற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் | எதிர்காலத்தில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| அமைச்சின் செயலாளருக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கெஸ்பேவ மற்றும் பாதுக்கை பிரதேச செயலகங்கள் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | அனுப்பப்பட வேண்டும். | |

**3.5 நட்டங்களும் இழப்புகளும்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல் தொடர்பான கூற்றின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்குக் குறைவாகவும் 5 - 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்டன ஆகவும் உள்ள அறவிடப்பட வேண்டிய அல்லது பதிவழிக்கப்பட வேண்டியன தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படாதுள்ள நட்டங்களும் இழப்புகளும் ரூபா 93,383,163 எனக் காட்டப்பட்டிருந்தது. அதில் மாவட்டச் செயலக வாகன விபத்துடன் தொடர்புடைய ரூபா 20,000 நட்டத்தைத் தவிர ஏனைய நட்டங்களையும் இழப்புகளையும் தீர்வு செய்வதற்கு 2019 மே 27 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்குகளில் உள்ள 5 ஆண்டுகளுக்குக் குறைந்த மற்றும் 5 - 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட இழப்புகளைத் தீர்வு செய்து அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்வு செய்யப்படாதிருக்கும் 5 ஆண்டுகளுக்குக் குறைவான இழப்புகளைத் தீர்வு செய்வற்கும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இழப்பாகிய கொழும்பு மாவட்டச் செயலகம் தீயால் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்ட இழப்பைப் பதிவழிப்பதற்கும் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், அரசாங்க கணக்குப் பணிப்பாளர் நாயகத்தால் அதனைப் பதிவழிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மஹரகம பிரதேச செயலகத்தின் இழப்புகள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டைப் பரிசீலித்தபோது மஹரகம பிரதேச செயலகத்திற்குத் தீயினால் ஏற்பட்ட இழப்பு ரூபா 503,593 என உறுதிசெய்யக் கூடியதாக இருந்தது. மாவட்டச் செயலகத்தில் பேணப்படும் நட்டங்கள் மற்றும் இழப்புகளுக்கான பதிவேட்டில் மேற்படி இழப்பு ரூபா 629,492 என பென்சிலால் குறிப்பிடப்பட்டிருந்தது | இழப்பின் சரியான பெறுமதியைக் குறிப்பிட்ட பதிவேடுகளில் உள்ளடக்க வேண்டும். இது அறவீடு செய்யப்படவுள்ளது அல்ல. புத்தகங்களில் பதிவழிக்கப்பட வேண்டிய தாகையால் 25 சதவீதம் சேர்த்துக் கொள்ளப்படலாகாது | பரிசோதனைக் குழு 105(1)(இ) நிதிப் பிரமாணத்தின்படி இழப்பின் 25 சதவீதத்தையும் சேர்த்துக் கொண்டதாலேயே அவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) மஹரகம செயலகத்தின் நட்டங்கள் மற்றும் இழப்புகள் பதிவேட்டின்படி 2015 சனவரி 30 ஆந் திகதியன்று WP.PD 2679 இலக்கமுடைய கெப் வண்டி ஹோமாகம நகரில் லொறி ஒன்றுடன் மோதியது சம்பந்தமாக தீர்வு செய்யப்படாதுள்ள ரூபா 47,500 இழப்பானது 2018 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | குறித்த இழப்பைக் கணக்கிலிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குமாறு கணக்கீட்டுப் பிரிவுக்கு அறிவிக்கப்படாததால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) பிரதேச செயலகம் ஒன்றை உருவாக்குவதற்கு முன்பு பிரதேச செயலகத்தின் பிரதேசமும் எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டு மும்மொழிகளிலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டுமாயினும், 1999 மே 19 ஆந் திகதி தொடங்கிய பாதுக்கை பிரதேச செயலகமும் 1999 மார்ச் 03 ஆந் திகதி தொடங்கிய திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்கும் உரிய எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு பிரிவை உருவாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் 2019 மே 15 ஆந் திகதி வரை வெளியிடப்படவில்லை. | பிரதேச செயலகத்தை உருவாக்குவதற்கு முன்னர் அச் செயலகத்திற்குரிய பிரிவுகளும் எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டு மும்மொழிகளிலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. |
| (ஆ) மஹரகம பிரதேச செயலகக் கட்டிடம் அமைந்துள்ள ரூபா 112 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய இலங்கை போக்குவரத்துச் சபையின் காணிக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை. | நிதியேற்பாட்டைப் பெற்று இழப்பீட்டை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த காணி முறையாகச் சுவீகரிக்கப்பட்டுள்ள போதும், இழப்பீடு வழங்குவது முற்றுப் பெறவில்லை. |
| (இ) பாதுக்கை பிரதேச செயலகத்தின் வக தெற்கு மற்றும் வக கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய மினிமறு பாதுகாப்புக் காணியை | பயிர்ச் செய்கைக்கான வரி அறவிடப்படும் அடிப்படையில் குத்தகைக்கு | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நெடுங்காலமாக அபிவிருத்தி செய்து பயன்படுத்தியவாறிருக்கும் நபர்களுக்கெதிராக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், பாதுகாப்புப் பிரதேசத்தின் பயிர்ச் செய்கைக்குரிய வரியிறுப்பாளர் பயன்படுத்தும் காணிகள் தொடர்பாகவும் தகவல்களை அறிந்து கொண்டிருக்கவில்லை. அதற்கமைய, பயிர்ச்செய்கைக்கான வரியின் அடிப்படையில் வரி செலுத்தியுள்ள பாதுகாப்புப் பிரசேத்தின் காணிகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு மனைகளை அமைத்துள்ளோர் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவில்லை. | வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு பிரதேசக் காணிகளில் மனைகளை அமைத்த தரப்பினருக்கு எதிராகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஈ) | இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 26.5 பர்ச்சர்ஸ் காணியை முறைப்படி அரச உடமையாக்காது அரசாங்கச் செலவில் பிரதேச செயலகக் கட்டிடம் அமைக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தில் இட வசதி போதுமானதாக அமையாததால் புதிய அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தற்போது தேசிய மயப்படுத்தல் கிரிக்கெட் சங்கத்திற்கு நெடுங்காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இரத்மலானை காலி வீதி 511 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியை (50 பர்ச்சர்ஸ்) பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இரத்மலானை பிரதேச செயலாளரரால் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு RAT/LAN/09/F1/29 இலக்கமுடைய 2017 நவம்பர் 17 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் காணியைச் சுவீகரிப்பதற்கு 2017 நவம்பர் 17 ஆந் திகதியின் பின்னர் கணக்காய்வுத் தினமான 2019 பெப்ரவரி 13 ஆந் திகதியளவிலும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த காணியைச் சுவீகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**4. நல்லாளுகை**

**4.1 மக்களுக்குச் சேவை வழங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 மார்ச் 23 ஆந் திகதி தொடக்கம் மஹரகம பிரதேச செயலகம் புதிய கட்டிடத்தில் இயங்கியவாறுள்ளது. தற்போது 3 மாடி வரை நிர்மாண வேலைகள் பூர்த்தியாகியுள்ள போதும், அந் நிர்மாணப் பணி தொடங்கி 9 ஆண்டுகளாகியும் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கமைய ஏனைய 3 மாடிகளும் கணக்காய்வுத் தினமான 2019 பெப்ரவரி 06 ஆந் திகதி வரை நிர்மாணிக்கப்படாதிருந்தது. தற்போது இக்கட்டிடத்தில் இரண்டாவது மாடியில் பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபம் அமைக்கப்பட்டுள்ளதுடன், வயது முதிர்ந்த மற்ற ஊனமுற்ற நபர்கள் அங்கு நடமாடுவது மிகவும் வசதியற்றதாக உள்ளது. அவ்வாறே, மின் தூக்கி இல்லாமையால் சேவைகளைப் பெறுவதற்கு வருகை தரும் பொது மக்கள் பெரும் இடருக்கு உள்ளாவது அவதானிக்கப்பட்டது. | கட்டிடத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி அமைக்கப்பட வேண்டிய எஞ்சிய மாடிகள் மூன்றையும் நிர்மாணித்து குறித்த மின் தூக்கியையும் பொருத்து வதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேவையான நிதியேற்பாட்டுடன் 4 மின்தூக்கிகளைப் பொருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| (ஆ) | மஹரகம பிரதேச செயலகத்தில் பொது மக்களுக்கான தினத்தில் பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறுவதற்கு நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருப்பதுடன், நிழற்பிரதி இயந்திரம் சரிவர இயங்காமையால் பணம் செலுத்திச் சேவையைப் பெறும் பொதுமக்கள் தரமான சேவையைப் பெற முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. | பணம் செலுத்தி சேவையைப் பெறும் பொதுமக்களுக்கு முறைப்படி சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலகங்களில் நாளாந்தம் வேலைகள் அதிகரித்தபோதும், ஒவ்வொரு பணிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதியைப் பொறுத்தே அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. சேவைகளை வழங்குவதற்கான உத்தியோகத்தர்களது பற்றாக்குறை காரணமாக தரமான சேவையைப் பொதுமக்களுக்கு வழங்குவதில் சிரமம் |

உள்ளது.

## 5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 09 | 06 | 03 | குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | அலுவலக வெற்றிடங்களை நிரப்புமாறு கோரப்பட்டபோதும், உத்தியோகத்தர்கள் வழங்கப்படாது வெற்றிடங்கள் நிலவுகின்றன. |
| மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | | |
| இரண்டாம் நிலை | 58 | 47 | 11 | | |
| ஆரம்ப நிலை | 19 | 15 | 04 | | |
| மொத்தம் | 89 | 70 | 19 | | |

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வெற்றிட எண்ணிக்கையின் சதவீதம் 21 ஆகும். அதில் இரண்டாம் நிலை வெற்றிடங்கள் 58 சதவீதம் என அவதானிக்கப்பட்டது.